வினா—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வண்டியூரில் 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

269—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தல்

வினா எண் 2107—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திருவிதாங்கோடு மற்றும் பேச்சிப்பாறை ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வினா—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை ஊராட்சி ஒன்றியம், திருவிதாங்கோடு மற்றும் பேச்சிப்பாறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

270—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2562—திருமதி எஸ். கவிதா சம்பத்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*